# ICCM-2021

# PROCEEDINGS

# 6th International Conference on Contemporary Management

## "Issues and Challenges of Sustainable Development: Fostering Resolutions towards Economic Resilience"

29th & 30th April, 2021

Faculty of Management Studies and Commerce
University of Jaffna,
Sri Lanka

**6th International Conference on Contemporary Management (ICCM) - 2021**


| | | |
|---|---|---|
| ©Copy Right | : | 2021 Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka. |
| Published by | : | Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka. |
| URL | : | https://iccm.maco.jfn.ac.lk |
| e-mail | : | iccm2021@maco.jfn.ac.lk |
| T.P | : | +94 (0)21 222 3610 |
| Printers | : | Guru Printers, Thirunelvely, Jaffna, Sri Lanka. |
| ISSN | : | 2783-8773 |


**Disclaimer:**


The contents of the full papers included in the publication proceedings remain with respective authors.

# புற்றுநோயாளர்கள் தம் நோய் நிலைமையை ஏற்றுக்கொள்வதில் இறத்தல் கோட்பாட்டு படிநிலைகளின் செல்வாக்கு (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் புற்றுநோயாளிகளை அடிப்படையாகக் கொண்டது)

**ஜெனோவா, எ., மேனகா, சி**
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை*

---

"புற்றுநோயாளர்கள் தமது நோய்நிலைமையை ஏற்றுக்கொள்வதில் இறத்தல் கோட்பாட்டு படிநிலைகளின் செல்வாக்கு" என்ற இவ்ஆய்வின் நோக்கம் புற்றுநோயாளர்கள் தமது நோய்நிலைமையை ஏற்றுக்கொள்வதில் இறத்தல் கோட்பாட்டின் படிநிலைகளின் செல்வாக்கினை ஆராய்வதாகும். இவ் ஆய்வில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு 2019 ஐப்பசி தொடக்கம் 2020 தை மாதக் காலப்பகுதிக்குள் புற்றுநோய் நிலைமை கண்டறியப்பட்டு சிகிச்சைக்காக வருகைத்தந்த புற்றுநோயாளர்களை அடிப்படையாகக் கொண்டு 20 மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டனர். இவ் ஆய்வானது பண்புசார் அடிப்படையில் ஆழமான நேர்காணல் முறையில் வடிவமைக்கப்பட்டது. ஆய்வின் தரவுகள் உள்ளடக்க பகுப்பாய்வுக்கு (Content Analysis) உட்படுத்தப்பட்டது. ஆய்வு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறு களாவன, புற்றுநோய்நிலைமையை ஏற்பதில் மாதிரிகள் இறத்தல் கோட்பாட்டின் மறுத்தல் படிநிலை, கோபப்படிநிலை, மனச்சோர்வு, பேரம்பேசுதல் படிநிலை, ஏற்றுக்கொள்ளல் படிநிலை என்பவற்றை கடக்கின்றனர். ஆனால் இறத்தல் கோட்பாட்டில் குப்லர் ரோஸினால் குறிப்பிடப்பட்ட படிநிலை ஒழுங்கு அடிப்படையில் இம்மாதிரிகள் தமது நோய்நிலைமையை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்ஆய்வானது பண்புசார் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் எதிர்கால ஆய்வாளர்கள் அளவுசார் ஆய்வுமுறையையும் கையாள்வது சிறப்பாக அமையும்.

**திறவுச்சொற்கள்:** *புற்றுநோய்; மரணம் மற்றும் இறத்தல் படிநிலைக் கோட்பாடு*

---